# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

## நிரவி-காரைக்கால்-609604

**வகுப்பு : எட்டாம் நிலை (அ/ஆ/இ/ஈ)**

பாடம் : தமிழ் - இரண்டாம் மொழிப்பாடம், பயிற்சித் தாள் -1 2022-2023

### பகுதி –அ படித்தல் திறன்

**1.பின்வரும் பத்தியைப் படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்க. (5)**

நல்லாதனார் என்னும் புலவரே திரிகடுகத்தின் ஆசிரியர் ஆவார். இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டு விளங்குகிறது. சுக்கு, மிளகு, திப்பிலியாகிய திரிகடுகம் என்னும் மருந்தானது, மக்களது உடல்நோயைப் போக்கி இன்பம் அளிப்பது போல, மக்களின் மன இருளைப் போக்கி, இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை அளிக்கக்கூடிய முப்பெரும் உறுதிப் பொருள்களை இந்நூலில் உள்ள ஒவ்வொரு வெண்பாவும் சிறப்புற எடுத்துக் கூறுகின்றது. குடிகளைக் கொடுமைப்படுத்திப் பொருள் சேர்க்கும் மன்னனும் பொய்யே பேசும் மக்களும் கணவனது சொல்லை மீறி, தான் விரும்பிய இடம்செல்லும் மனைவியும் இருப்பதே மழை பெய்யாமைக்குக் காரணம் என்று ஆசிரியர் இப்பாடலில் கூறுவதை நாம் எண்ணுதல் வேண்டும்.

1. திரிகடுகத்தின் ஆசிரியர் யார்?

   அ). நல்லந்துவனார் ஆ). நல்லாதனார் இ). நல்லாத்தூரார்

2. சுக்கு, மிளகு, திப்பிலி கலந்த மருந்தின் பெயர் என்ன?

   அ). திரிகடுகம் ஆ). திரிமருந்து இ). திரிசூலம்

3. மழை பெய்யாமைக்குக் காரணங்களாக திரிகடுகம் எத்தனைக் காரணங்களைக் கூறுகிறது?

   அ). நான்கு ஆ). ஐந்து இ). மூன்று

4. மக்களின் எத்துயரைப் போக்குவதாக இந்நூலில் கூறப்படுகிறது?

   அ). பசிப்பிணி ஆ). மன இருள் இ). பண ஆசை

5. இம்மையிலும் மறுமையிலும் எதை அளிப்பதாக இந்நூல் கூறுகிறது?

   அ). இன்பம் ஆ) துன்பம் இ). வறுமை

2. **செய்யுள் வினாவிற்கு விடையளி.**

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலன் வேண்டாவாம் - முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்.**

**வினாக்கள்:**

1. **இப்பாடலின் தலைப்பு என்ன?**
   அ. திருக்குறள் ஆ. நீலகேசி இ. கல்வி அழகே அழகு
2. **கலன் என்பதன் பொருள் என்ன?**
   அ. அணிகலன் ஆ. தங்கம் இ. வெள்ளி
3. **கல்வி கற்றவருக்கு எது அழகு ஆகும்?**
   அ. கல்வியே ஆ. பணியே இ. பிணியே
4. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
   அ. பாரதியார் ஆ. குமரகுருபரர் இ. சீதகாதி
5. **முற்ற என்பதன் பொருள் என்ன?**
   அ. ஒளிர ஆ. இருள இ. கருக

3. பின்வரும் மனப்பாட குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக.

1. **சொல்லுக ---------------- பிறிதுஓர்சொல் அச்சொல்லை**
   **வெல்லும்சொல் இன்மை அறிந்து.**

   அ. பணிவு ஆ. சொல்லைப் இ. தகவிலர்

2. **அவைஅறிந்து ஆராய்ந்து ---------------- சொல்லின்**
   **தொகையறிந்த தூய்மை யவர்.**

   அ. அனையர் ஆ. தேவர் இ. சொல்லுக

3. **சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
   **கோடாமை சான்றோர்க்கு --------------.**

   அ. அணி ஆ. பிறர்க்கு இ. இறைக்கு

4. **வருமுன்னர் காவாதான் ------------------ எரிமுன்னர்**
   **வைத்தூறு போலக் கெடும்.**

   அ. மாத்திரையர் ஆ. ஆதிரையர் இ. வாழ்க்கை

## பகுதி –ஆ எழுதுதல் திறன்

**4. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் இசைக்கருவிகள்
2. தலைக்குள் ஓர் உலகம்
3. வெட்டுக்கிளியும் சருகுமானும்

**5. பின்வரும் படம் பார்த்து உன் சொந்த நடையில் எழுதுக. (பத்து வரிகளுக்கு மிகாமல்)**

